Embassy of the United States of America
Colombo

# PRESS RELEASE

Public Affairs Section
Tel: +94 (1) 249-8100 ● Fax: +94 (1) 244-9070
Email: VanHornNT@state.gov ● http://srilanka.usembassy.gov

**இலங்கை மற்றும் அமெரிக்க அரசாங்கங்கள் "யூ லீட்" இளைஞர் வேலைவாய்ப்பு நிகழ்ச்சித்திட்டத்தை ஆரம்பிக்கின்றன**

Release No. 20171020

**கொழும்பு, ஒக்ரோபர் 19:** இலங்கை மற்றும் அமெரிக்க அரசாங்கங்கள், யூ லீட் (நீங்கள் முன்னெடுங்கள்) எனும் இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பு, தொழிற்றிறன் விருத்தி, மற்றும் தொழில் முயற்சிக்கு ஆதரவளிக்கும் சர்வதேச அபிவிருத்திக்கான ஐக்கிய அமெரிக்க நிறுவனத்தினால் நிதியுதவியளிக்கப்பட்ட ரூ. 1.8 பில்லியன் நிகழ்ச்சித்திட்டத்தை ஒக்ரோபர் 19இல் ஆரம்பித்தன. அமெரிக்க தூதுவர் அதுல் கேஷாப் மற்றும் அமைச்சர் சந்திம வீரக்கொடி ஆகியோர் இலங்கை வர்த்தக சம்மேளனத்தில் நடைபெற்ற அங்குரார்ப்பண வைபவத்தில் பிரதம விருந்தினர்களாகக் கலந்துகொண்டனர்.

*"இலங்கையின் எதிர்காலமானது நாட்டின் வளத்தை வலுவுடையதாகச் செய்ய அதன் இளைஞர்கள் பெற்றுக்கொள்ளும் திறன்கள் மற்றும் அறிவினிலேயே தங்கியுள்ளது"* என அமெரிக்க தூதுவர் தெரிவித்தார். அரசாங்கம் மற்றும் வர்த்தகங்களின் வளங்களையும் அறிவினையும் பிரயோகிப்பதன் மூலம் யூ லீட் நிகழ்ச்சித்திட்டமானது அதிக தேவையுள்ள வேலைகளில் சிறந்த உலகளாவிய பழக்கங்கள் கருவிகள் மற்றும் பயிற்சிகளுடன் அணிசேருகிறது எனக் குறிப்பிட்டு அரசாங்க, தனியார் பங்காண்மையின் முக்கியத்துவத்தை தூதுவர் அதுல் கேஷாப் வலியுறுத்தினார்.

USAID இலங்கை அரசாங்கத்திடமிருந்தான ஒரு பங்காண்மையாளர்களின் கூட்டணியுடன், தனியார் துறையினருடன் இலாப நோக்கற்ற நிறுவனங்களுடன், புலமைசார் நிறுவனங்களுடன் அடுத்த நான்கு வருடங்களுக்கு இலங்கையின் இளையவர்களை, தொழிற்சந்தையில் மிகவும் போட்டித்தன்மையுள்ளவர்களாக மாறுவதற்கு உதவுவதற்கு அவர்களுடன் சேர்ந்து உழைக்கும். .

பொருளாதார வளர்ச்சி அணியின் தன்னார்வத் தொண்டர்கள் USAID ஆல் நிதியீட்டப்பட்ட "நீங்கள் முன்னெடுங்கள்" நிகழ்ச்சித்திட்டத்தை நிர்வகிப்பதுடன் IESC ஆனது நிகழ்ச்சித்திட்டத்தை அமுல்படுத்தும். IESCஆனது 1965 ஆம் ஆண்டிலிருந்து இலங்கையில் நூற்றுக்கணக்கான தனியார் தொழில்முயற்சிகளுடன் பணியாற்றும் ஒரு நிறுவனமாகும். நீங்கள் முன்னெடுங்கள் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் IESCஆனது இலங்கை வர்த்தக சம்மேளனம், அமெரிக்க வர்த்தக சம்மேளனம், அரிசோனா அரச பல்கலைக்கழகம், உலகளாவிய சனசமூகங்கள், வாழ்வுக்கான திறன்கள், வெறிற்ரெ றிசேச் என்பவற்றுடன் பங்காளராகும்.

**தூதுவர் அதுல் கேஷாப்**

**யூ லீட், அங்குரார்ப்பண நிகழ்வில் ஆற்றிய உரை**

**ஒக்ரோபர் 19, 2017**

சீமாட்டிகளே, கனவான்களே, காலை வணக்கம். உங்கள் எல்லோரையும் காண்பது நன்றாக உள்ளது. அமைச்சர் அவர்களே இன்று நீங்கள் எங்களுடன் இருப்பது பெரிய கௌரவமாக உள்ளது. அமைச்சர் சந்திம வீரக்கொடி எங்களுடன் இருப்பதையிட்டு உண்மையில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம். இந்த முக்கியமான நிகழ்வினை எமக்காக ஏற்பாடு செய்வதற்காக வர்த்தக சம்மேளனத்திற்கு நன்றி தெரிவித்துக் கொள்கின்றேன்.

நண்பர்களே உங்களுக்குத் தெரியும், நான் அந்த காணொளியை பார்த்துக் கொண்டிருந்தேன். அந்த இளைஞர்களின் அபிலாஷைகளாலும் திருப்திநிறைந்த மகிழ்வான வாழ்வை இட்டுச்செல்ல விரும்பும் அவாவினாலும் நான் தூண்டப்பட்டேன். அத்துடன் எங்களில் எமது வேலையைக் கொண்டிருப்பவர்களும், எமது தகுதிநிலையைக் கொண்டிருப்பவர்களும் மற்றும் கையில் சிறிது பணத்தைக் கொண்டிருப்பவர்களுக்கும் அந்தக் கணத்திற்கு திரும்பிச் செல்வது கடினமாக இருக்கும். எவ்வளவு முன்பதாக இருந்தாலும் ஏனையோரைக் காட்டிலும் எம்மில் சிலருக்கு, இவ் அறையில் இருக்கும் அநேகமானவர்களுக்கு, தசாப்தங்களுக்கு முன்பதாக, எதிர்காலம் எமக்கு எதைக் கொண்டுவரும் என அவர்கள் அறியாதிருந்தபொழுது, தாம் ஒரு குடும்பத்தை உருவாக்குவார்களா, வேலையை எடுப்பார்களா, பொது நன்மைக்காக தங்களால் பங்களிப்புச் செய்ய முடியுமா, தமது வாழ்வில் சில திருப்திகளைக் கண்டுகொள்வார்களா என அவர்கள் அறியாதிருந்தார்கள்.

வாழ்வில் வெற்றி சந்தோசத்திற்கு மிக முக்கியமான உள்ளீடுகளில் ஒன்றாக இருப்பது ஒரு பாதுகாப்பான புகலிடம், ஒரு மகிழ்வான இல்லம், ஒரு அன்பான குடும்பம் மற்றும் திருப்தி செய்யும் ஒரு அர்த்தபுஷ்டியான வேலைவாய்ப்பு என்பவற்றைக் கொண்டிருப்பதாகும்.

இலங்கையை நான் ஒரு நாடு என்று நினைக்கும்பொழுது சில தசாப்தங்களாக கடந்த காலத்தில் அதீத மனவடு, அதீத துன்பம், அதீத நோவு, என்பவற்றின் ஊடாக வந்திருந்தது. நான் அந்த ஒளிப்படத்தைப் பார்க்கும்போது இந்த இளைஞர்கள் அனைவரும் நாளாந்த வாழ்வின் வெற்றியின் முழுமையான ஏற்பாடுகளிலிருந்து உண்மையில் நன்மை பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருந்திருந்தால் எப்படியாக இருக்குமென்றும், இந்த இளைஞர்கள் எல்லாம் தமது முழுமையான இயலுமையை சாதிக்கும் ஒரு வாழ்வை வாழ்ந்திருந்தால் நாட்டிற்கு எவ்வளவு நன்மையை வழங்கியிருக்க முடியுமென்றும் நான் நினைத்தேன்.

நண்பர்களே, இந்த நாட்டைச் சுற்றி எல்லா இடங்களுக்கும் பயணம் செய்யும்பொழுது பலரைச் சந்திக்கக்கூடியதாக இருந்தது. இந்த நாட்டின் வாழ்வின் மகிழ்ச்சியான ஒரு கணங்களாக இது உள்ளது என நான் வாதிடுவேன். பல தசாப்தங்களின் பதட்டங்களுக்கும் அழுத்தங்களுக்கும் பிற்பாடு இலங்கையர்கள் ஒரு பிரகாசமான எதிர்காலத்தை நோக்கி இருக்கக்கூடியதாக உள்ளது.

நண்பர்களே, இந்த நாட்டின் இளைஞர்களின் இயலுமையும் மனித ஆற்றலும் மிகவும் ஆச்சரியமானது என நான் வாதிடுவேன். இந்த நாட்டின் இளைஞர்கள் என்ன செய்யலாம் எனப் பார்ப்பதற்கு, இந்த நாட்டின் எதிர்காலத்திற்கான அவர்களின் நோக்கு என்ன என்று பார்ப்பது ஆச்சயரியமானதே. அமெரிக்கத் தூதுவர் என்ற வகையிலும், எமது நாட்டின், அரசாங்கத்தின் மக்களின் பிரதிநிதியாக இருப்பவர் என்ற வகையிலும் நான் உங்களுக்குச் சொல்ல வேண்டும். இந்த மக்களின் பார்வைநோக்கால் நாம் பிடிக்கப்பட்டுள்ளோம். 2015 ஆம் ஆண்டு ஜனநாயகமும் சுதந்திரமும் மிக்கதான தேர்தலில் எடுத்துரைக்கப்பட்ட மக்களின் பார்வைநோக்கால் நாம் ஈர்க்கப்பட்டுள்ளோம். அமெரிக்க-இலங்கை உறவுகளில் ஒரு புதிய உயர்ந்த அடையாளத்தை விளைவித்துள்ளது. இதற்கு முன் நாம் கொண்டிராத சிறந்த உறவுகளை விவாதிக்கத்தக்க முறையில் இது விளைவித்துள்ளது. உங்களின் மக்களின் காரணமாக உங்களின் இளைஞர்களின் காரணமாக, உங்களது அரசாங்கம், உங்களது அரசியல் தலைவர்கள்,

உங்களது ஜனாதிபதி, உங்களது பிரதம மந்திரி, இந்த நாட்டை ஒரு நல்ல முறையில் இட்டுச் செல்கிறார். சிறந்த ஜனநாயகம், மீளிணக்கம், வளம், அமைதி, ஐக்கியம் என்பவற்றை நோக்கிய நம்பிக்கைக்குரிய வகையில் எல்லா இளைஞர்களுக்கான முழு சந்தர்ப்பத்திற்கான வகையில் இட்டுச் செல்கின்றனர்.

நண்பர்களே, அமெரிக்க மக்கள் உண்மையில் மதிக்கும், உண்மையில் பாராட்டும் பர்வைநோக்கு இதுதான். அத்துடன் இலங்கை மக்களின் கனவுகளையும், பார்வை நோக்குகளையும் சாதிப்பதற்கான அரசாங்கம் மற்றும் மக்கள் என்ற வகையில் எமது முழு ஆதரவையும் வழங்குவதற்கும் எம்மை அர்ப்பணித்துள்ளோம். உயர்மட்ட அமெரிக்கர்களால் மேற்கொள்ளப்பட்ட விஜயங்கள் அனைத்தையும் பாருங்கள். டாக்டர் சிசன் மற்றும் குழுவினரால் பங்காண்மையில் வழங்கப்படும் அபிவிருத்தி உதவிகள் அனைத்தையும் பாருங்கள். USAIDக்கும் இலங்கை மக்கள் மற்றும் அரசாங்கத்திற்கும் இடையிலான ஆறு தசாப்த பாரம்பரியம் மற்றும் நட்புறவின் தொடர்ச்சியைப் பாருங்கள். கடன் மற்றும் பொதுநிதி தொடர்பான விடயங்கள் மீது அரசாங்கத்துடன் பணியாற்றுகையில் வெளிப்படைத்தன்மை மற்றும் சட்டம் ஒழுங்கு தொடர்பான முயற்சிகளைப் பாருங்கள். புத்தாயிரம் ஆண்டு சவால் ஒத்துழைப்பு மீதான எமது முயற்சிகளைப் பாருங்கள். எங்களது இளம் மாலுமிகள் கடல்சார் உத்தியோகத்தர்கள் உங்களது ஆயுதப்படைகளுடன் மனித நேய உதவிகள் போன்ற பயிற்சிகளுக்காக மாத்திரமல்லாது நிவாரண உதவி போன்ற செயற்பாடுகளிலும் கூட இந்த நாட்டின் எல்லாப் பகுதிகளிலும் அவர்கள் தொண்டர்களாகவும், பாடசாலைகளிலும், அநாதைகள் இல்லங்களிலும், ஏனைய இடங்களிலும் தர்மச் செயல்களில் ஈடுபடுவதை நீங்கள் காண்கிறீர்கள். இலங்கை மக்களின் வெற்றியில் நாம் முழுமையாக ஈடுபட்டுள்ளோம்.

இந்த உண்மையிலேயே முக்கியமானதும் தொடர்ந்து செல்வதுமான இந்த நிகழ்ச்சித்திட்டத்தை உங்களுக்கு ஆரம்பித்து வைத்து பேசுவது எனக்கு குறிப்பாக சந்தோசத்தையும் கௌரவத்தையும் தருக்கிறது. என்னைப்போல நம்புவீர்களாயின் இளைஞர்கள் உண்மையில் இந்த நாட்டின் எதிர்காலமாக உள்ளனர். ஆகவே இந்த நிகழ்ச்சித்திட்டத்தை சந்திம வீரக்கொடி முன்பாக ஆரம்பித்து வைக்கின்றோம். எங்களது நம்பிக்கை என்னவெனில், எதிர்காலத்தின் எமது முதலீடுகளாகவும், வளம், சந்தோசத்தின் உயர்ந்த உச்சிகள் வரைக்கும், உங்களது நாட்டை எடுத்துச்செல்வதற்கான இந்த மக்களின் நம்பிக்கையின் மூலங்களாகவும் உள்ளது.

எனது மனதில் உள்ள ஒரு விடயம் என்னவெனில் இந்த உலகத்தில் 1.5 பில்லியன் இளையவர்கள் உள்ளார்கள் என்பதுடன் அவர்கள் எவ்வாறு உணருகிறார்கள், அவர்கள் எந்தளவிற்கு வேலைக்கு அமர்த்தப்பட்டுள்ளார்கள் என்பது, நாளைய உலகத்தின் வளம், பாதுகாப்பு, அமைதியின் ஒரு பாரதூரமான தாக்கத்தைக் கொண்டிருக்கும்.

இலங்கையின் வேலைவாய்ப்பற்றவர்களின் 70 வீதத்தினர் இளைஞர்களாகவும், 15 - 29 வயதிற்கு இடைப்பட்டவர்களாகவும் உள்ளனர் என புள்ளிவிபரம் உள்ளது. வேலைவாய்ப்பற்றவர்களில் 70 வீதத்தினர் இளைஞர்களாக உள்ளனர். 15 - 29 வயதுக்குழுவினரிடையே வேலைவாய்ப்பின்மை இருப்பது என்பது ஏனைய சனத்தொகையினரின் வேலைவாய்ப்பின்மையைக் காட்டிலும் ஒன்பது மடங்கு பெரிதாக உள்ளது. ஒவ்வொரு வருடமும் பல்கலைக்கழக நுழைவுக்கான சந்தர்ப்பமின்றி பாடசாலை முறைமையை விட்டு 278,000 மாணவர்கள் விலகுகிறார்கள். இந்தக் வயதுக் குழுவினரில் இலங்கையின் இளம் ஆட்களில் கால் மில்லியனுக்கு அதிகமானோர் ஒரு வேலையைக் கண்டுகொள்ள முடியாதிருப்பதாக கண்டுகொள்ளப்படுகிறது.

இலங்கை தொடர்பாக எமக்கு கிடைக்கும் நம்பிக்கை என்னவெனில் அதன் வளர்ந்து செல்லும் பொருளாதாரம் ஆகும். உல்லாசப் பயணத்துறையுடனும், அதிக வேலைவாய்ப்பு சந்தர்ப்பங்கள் வருவதை நான் புரிந்துகொள்கிறேன். உல்லாசப்பயணத்துறைக்கு மட்டும் 2020 இல் 300,000 புதிய வேலைவாய்ப்புக்கள் தேவைப்படுகின்றது. நிர்மாணத்துறையை பார்ப்பீர்களாயின் 400,000 பணியாளர்கள் தேவையாக உள்ளது. நண்பர்களே உலகத்தின் எல்லா இடங்களிலும் அமெரிக்காவில் கூட இங்கே இலங்கையிலும் வேலை உருவாக்கத்தின் வளர்ச்சியினதும் இயந்திரமாக இருப்பது தனியார்துறையாகும் என நான் வாதிடுவவேன். உல்லாசப்பயணத்துறை, நிர்மாணத்துறை, கடல்சேவைகள், போன்ற துறைகள் உங்களது பொருளாதார ரீதியில் ஒப்பீட்டு ரீதியில் நன்மையுடையதாக இருப்பதுடன் இத்துறைகளில் தனியார் துறையானது வேலை

உருவாக்கத்தினை வளர்ச்சிக்கு இட்டுச் செல்லும் என்பதுடன் இளைஞர்களுக்கு சந்தர்ப்பத்தையும் வழங்கும்.

இளைஞர்களால் எதிர்கொள்ளப்படும் சவால் உள்ளது எனவும், உலகம் பூராகவும் இளைஞர்கள் தாம் ஒரு குடும்பத்தைக் கொண்டிருக்கவும், ஒரு வீட்டைச் சொந்தம் கொண்டாடவும், மாதப்பணம் கட்டவும், நிலையான ஒரு வேலையை வைத்திருக்கவும், தம்மைத்தாமே கவனம் எடுக்கவும் முடியாதிருக்கும் என உணரும், வளரும் விரக்தியானது உலகம் பூராகவும் உள்ளது எனவும் நாம் எல்லோரும் ஏற்றுக்கொள்ள முடியும் என நான் நினைக்கின்றேன். தன்னியக்கம் அதிகரித்துவரும் உலகில் வேலை உருவாக்கமானது நிச்சயமானது அல்ல. இருந்தும் சில திறன்கள் எப்பொழுதும் தேவைப்படுவனவாகவே உள்ளன. பாடசாலைகள் சிலவற்றுக்கு உயர்தரம், அல்லது சாதாரண தரம் தேவையில்லை, அவர்களுக்குத் தேவையானது எல்லாம், உண்மையான திறனே. எனது வீட்டில் எவ்வாறு குழாய் பொருத்துவது என எனக்குத் தெரியாது என எனது மனைவியார் கூறுவார் என நான் உங்களுக்குச் சொல்லுகிறேன் கனவான்களே சீமாட்டிகளே. நான் உங்களுடன் அறையில் உள்ள பலருக்கும் அது எவ்வாறு எனத் தெரியாது என நான் உங்களுடன் பந்தயம் பிடிப்பேன். எல்லோரும் அறிந்ததுபோல உங்களுக்கு ஒரு குழாய் பொருத்துனர் தேவைப்படும்பொழுது உங்களுக்கு ஒரு குழாய் பொருத்துனர் தேவை. அத்துடன் இந்த வேலைகளானவை எதிர்காலத்தில் அவசியமானவையாக இருக்கப் போகின்றன.

ஆகவே சவால்களில் ஒன்று என்னவெனில் பொருளாதாரம் முழுமையாக வளருவதை உறுதிப்படுத்துவதற்கு எந்தப் பொருளாதாரத்திலும் போதியளவு ஆட்களை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டியிருப்பதாகும். இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் முழு நோக்கமும் அதுதான். இதிலே கணிசமானளவு ஐக்கிய அரசுகளின் அரசாங்கத்தின் பணம் முழுவதுமாகும். இலங்கை மக்களின் எதிர்காலத்திற்கும் மகிழ்வுக்குமான ஒரு முதலீடு இதுவாகும். இந்த நாட்டின் எதிர்கால வளத்திற்கான முதலீடாகும். இலங்கை ஒரு ஸ்திரமான, வளமான, மகிழ்வான, மீளிணக்கம் காணப்பட்ட நாடாக இருக்க முடியும் என காண்பதற்கான முதலீடாகும். இளைஞர்கள் எல்லாம் தமது முழு இயலுமையை சாதித்துக்கொள்ளக் கூடியதாக, அவர்கள் மகிழ்வாக இருக்கக்கூடிய பொருளாதாரத்தின் பெரும் மகிழ்வுக்காக பங்களிப்புச் செய்யக்கூடிய ஒரு நாடாக இருக்கக்கூடும் என்பதற்கான முதலீடாகும்.

ஒரு மிகவும் சந்தை திசைப்படுத்திய திறன் மற்றும் நெகிழ்ச்சித்தன்மை திசைப்படுத்திய இளைஞர் வேலையிடங்களை உருவாக்குவதற்காக இலங்கை ரூபா 1.8 மில்லியன் இலங்கை ரூபாக்கள், 12 மில்லியன் அமெரிக்க டொலர்களுக்கு சமமான முதலீடு USAID அதன் கருத்திட்டப் பங்காண்மையாளர்கள் மற்றும் இலங்கை அரசாங்கத்திற்காக முதலீடு செய்யும் எண்ணமாகும். நீங்கள் முன்னெடுங்கள் முனைப்பானது இலங்கையின் வேலைவாய்ப்பற்ற இளைஞர்களை புதிய மற்றும் ஏலவே உள்ள வேலைகளுடன் இணைக்கும் என்பதுடன் சுயவேலைவாய்ப்புச் சந்தர்ப்பங்களை உருவாக்கும் அல்லது விஸ்தரிக்கும். திறன் விருத்தி மற்றும்வேலையில் பயிற்சி பெறுதல் என்பவற்றால் செலுத்தப்பட்டு, ஆலோசனைச் சேவைகள் மற்றும் தனியார் அரசதுறை முனைப்புக்களானது அவர்கள் சொந்த வியாபாரங்களை ஆரம்பிக்கவோ அல்லது மேலதிக வேலைவாய்ப்புக்களை உருவாக்கவோ நிதியைப் பெற்றுக்கொள்ளச் செய்வதில் இளைஞர்களை முன்னேற்றும்.

அமெரிக்காவைப் பொறுத்தளவில் ஒரு மிகச் சிறந்த விடயம் என்னவெனில் எம்மிடம் ஒரு தொழில்முயற்சியாளர் கலாசாரம் உண்டு. எங்களுக்கு ஒரு தொடக்கி வைக்கும் கலாச்சாரம் உண்டு. உங்களுக்குத் தெரியுமா ஒரு இளம் ஆளானவர் நான் என்னுடைய நிரந்தரமான அரசாங்க வேலையை விட்டு விட்டு ஒரு புதிய கம்பனியை ஆரம்பிக்கப் போகிறேன் என அவர் சொல்வது வழமைக்கு மாறானது அல்ல. ஸ்டீவ் ஜொப்ஸ் ஒரு தொழில்முயற்சியாளர் அல்ல ஆனால் அவரிடம் எதுவும் இருக்கவில்லை. ஆனால் உலகிலே மிகப் பெரிய கம்பனி ஒன்றை தொடக்குவதற்கான ஒரு எண்ணம் அவரிடம் இருந்தது. ஒரு எண்ணத்தின் சக்தி தன்னிடமுள்ள நம்பிக்கை, சிறிதளவு கடன் பெற்றுக்கொள்ளக்கூடிய தன்மை, சுயநம்பிக்கை என்பவற்றின் மீது உலக அடிப்படையை மாற்றிய பல தொகை மில்லியன் பெறுமதியான கம்பனிகளை உருவாக்கிய ஏனைய ஆயிரக்கணக்கான அமெரிக்கர்களையும் நீங்கள் சிந்திக்க முடியும். முகநூலை ஒரு வெற்றிகரமாக மாற்றுவதற்கு அவர்களுக்கு ஒரு பட்டத்தை முடிக்கத் தேவையிருக்கவில்லை சுயநம்பிக்கையின் நிமித்தமாக மாத்திமிரமே. மைக்ரோசொப்டிலிருந்து

அவர்கள் வெளியேறினார்கள் சுயநம்பிக்கையினாலே. அவர்கள் ஒரு வேலையை விட்டு விட்டு உலகத்தையே மாற்றும் கம்பனியினை ஆரம்பித்தார்கள் சுயநம்பிக்கையினாலே. உதவும் ஊக்கியாக இளம் ஆட்களின் அச்சங்கள், விரக்திகள், அக்கறைகளை தீர்த்து வைப்பதுமாக அந்த ஒளிப்படத்தில் இருந்து நாம் எல்லோரும் கேட்டுக்கொள்பவைகள் இன் ஒரு பாகமாகும்.

95,000 இளைஞர்களுக்கு மேற்பட்டோருக்கு முன்னேற்றகரமான துறை வழிகாட்டியை விருத்தி செய்வதற்கும் தொழிற்சந்தையில் அவர்கள் இணைவதற்கு சிறந்த முறையில் தயாரிப்பதற்கும் மேற்பட்ட நாடுபூராகவும் 1,200 க்கு மேற்பட்ட ஆலோசகர்களை பயிற்றுவிப்பதற்கு தனியார்துறையுடன் இந்த நிகழ்ச்சித்திட்டத்தின்பொழுது நாம் பங்காண்மை செய்துகொள்வதே எமது நம்பிக்கையாகும்.

உயர் வளர்ச்சித்துறையினருக்கு முன்னுரிமை அளிக்கும் முகமாக அரச மற்றும் தனியாரதுறை பங்காண்மையாளர்களுடன் நெருக்க ஒத்துழைப்புடன் விருத்தி செய்யப்பட்ட 50 புதிய பாடவிதானங்களை அதன் பிரகாரம் அறிமுகம் செய்து வைக்கும். நீங்கள் முன்னெடுங்கள் நிகழ்ச்சித்திட்டமானது வேலைவாய்ப்பை உறுதிப்படுத்துவதற்கும் ஆண்களுக்கும் பெண்களுக்கும் இடையிலான வருமான வேறுபாட்டைக் குறைப்பதற்கும் கிராமிய இளைஞர்களையும் பெண்களையும் விசேடமாக வேலையில் ஈடுபடுத்தும்.

நண்பர்களே இவைகள் அனைத்தையும் நாமாக செய்துவிட முடியாது என நான் உணருகிறேன். அபிவிருத்தியில் 60 ஆண்டுகள் ஆச்சரியமுள்ள பங்காளர்களாக இலங்கை அரசாங்கத்துடன் பணியாற்ற வேண்டும். எமது பங்காளராகிய பொருளாதார வளர்ச்சியின் தன்னார்வமுடையவர்களுடன் நாங்கள் பணியாற்ற வேண்டும். சர்வதேச சேவை நிறைவேற்றுப் படையினர், திறன்விருத்தி அமைச்சும் மற்றும் உண்மையில் தொழில்பயிற்சி, இலங்கை வர்த்தக சம்மேளனம், அமெரிக்க வர்த்தக சம்மேளனம், தனியார்துறை, இலாபநோக்கற்ற பல பங்காண்மையாளர்கள் போன்ற எம்மோடு பணியாற்றுபவர்களுடன் நாம் இணைந்து செயலாற்ற வேண்டும். இதை ஆரம்பித்து வைக்கும்பொழுது அவர்களது பங்காண்மை, அவர்களது ஐக்கியம், ஒத்துழைப்பு அனைத்துக்கும் நான் நன்றி கூற விரும்புகிறேன். .

அமெரிக்கர்கள் என்ற வகையில் நாம் இதனை வெறுமனே இலங்கை மக்களின் நன்மைக்காக செய்யவில்லை. இலங்கை போன்ற நாடுகள் ஒரு சிறந்த ஜனநாயகத்துடனும் பலத்துடனும் மிகவும் இயலக்கூடிய நாடுகளாக நன்மையடையும்பொழுது இது அமெரிக்க மக்களுக்கு நன்றாக இருக்குமென்று நாம் நம்புகின்றோம். முழு கிரகத்தினதும் அமைதிக்கும் பாதுகாப்புக்காகவும் இதைச் செய்கிறோம்.

ஆகவே இங்கு இருப்பதற்காக நான் நன்றி கூறுகின்றேன். திரு. அமைச்சர் அவர்களே நாங்கள் உங்களுக்கு மிகவும் நன்றியுடையவர்களாக இருக்கின்றோம். சம்மேளனத்திற்கும் குறிப்பாக இதை ஒழுங்கு செய்து நடாத்தியமைக்காக நன்றி.

###